රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Services, Provincial Councils and Local Government**
ඉංජිනේරු සේවා අංශය, பொறியியல் சேவைப் பிரிவு, Engineering Services Division
නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකා. சுதந்திரச் சதுக்கம் கொழும்பு 07 இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.
Website : www.pubad.gov.lk

| | | | | | |
|---|---|---|---|---|---|
| දුරකතන / தொலைபேசி: / Telephone | 011-2696211-13 | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 011-2695279 | ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail | information@pubad.gov.lk |
| අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director | 011- 2698268 | ෆැක්ස් / தொலைநகல் / Fax | 011- 2698268 | ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail | desb@pubad.gov.lk |


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எனது இல / My No | ES/A/ESC/33/G-VI | ඔබේ අංකය / உமது இல / Your No | | දිනය / திகதி: / Date | 2020.11.30 |

சகல செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்கள தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்

**இலங்கை பொறியியல் சேவை உத்தியோகத்தர்களை தரம் I லிருந்து விசேட தரத்திற்கு தரம் உயர்த்துதலும் மற்றும் பதவிக்கான நியனமங்களும்**

மேற்குறிப்பிட்ட தரம் உயர்த்தல் விடயம் தொடர்பில் தங்களுக்கு அனுப்பிய 2020.11.12 ஆம் திகதியிட்ட ES/A/ESC/33/G-VI எனும் இலக்க கடிதத்தில் குறிப்பிட்ட தரம் உயர்த்தலுக்கான விண்ணப்பம் கோரல் அறிவித்தலில் 3.2 (அ) மற்றும் (ஆ) பந்திகள் கீழே குறிப்பிட்டுள்ளவாறு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் மாற்றம் செய்யப்படுகின்றது என்பதை தங்களுக்கு இக் கடிதத்தில் அறியத்தருகின்றேன்.

இவ் அறிவித்தலை தயவுசெய்து தங்கள் அமைச்சில் /திணைக்களத்தில் /மாகாண சபை அலுவலகத்தில் பணிபுரியும் சகல தரம் I பொறியிலாளர்களின் கவனத்திற்கு கொண்டுவரவும்.

**திருத்தங்கள்**

3.2 நேர்முகப்பரீட்சைக்கான புள்ளிகள் வழங்கும் முறை பின்வருமாறு

**(அ.) சேவை மூப்பு – (ஆகக்கூடியதாக 60 புள்ளிகள்)**

"அரசாங்க சேவை இணையத்தின் சுற்றறிக்கையின் இல. 01/2019 படி செயல்திறன் மற்றும் திருப்திகரமான சேவைக்காலமாக 18 ஆண்டு காலத்திற்கு அதிகமான செயற்றிறன் மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தையும் மற்றும் தரம் I இல் 5 வருட செயற்றிறன் மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தையும் கருத்திற் கொண்டு புள்ளிகள் வழங்கப்படும்" என இப்பந்தி மாற்றப்படுகின்றது.

**(ஆ.) திறமைகள் – (ஆகக்கூடியதாக 40 புள்ளிகள்)**

(ஆ. 1) மாற்றம் செய்யப்படவில்லை

(ஆ. 2) மாற்றம் செய்யப்படவில்லை

(ஆ. 3) PowerPoint presentation - 10 புள்ளிகள்

மேலே (ஆ. 1) மற்றும் (ஆ. 2) ல் குறிப்பிட்ட திட்டம் / நிகழ்ச்சி நிரல் தொடர்பான 10 நிமிட PowerPoint presentation.

i தொடக்கம் iv வரை எவ்வித மாற்றமுமில்லை. v ல் குறிப்பிட்ட ‘‘வேறு பிறமொழிகள்’’ என்பது ‘‘ஆங்கிலமொழி’’ என மாற்றம் செய்யப்படுகிறது.

## குறிப்பு

(அ) “தமிழ் மொழி அல்லது சிங்கள மொழியில் PowerPoint presentation செய்யும் விண்ணப்பதாரிகளுக்கு புள்ளிகளானது i தொடக்கம் iv கீழ் மட்டுமே வழங்கப்படும்” என இப்பந்தி மாற்றப்படுகின்றது.

(ஆ) மாற்றம் செய்யப்படவில்லை

(இ) “PowerPoint presentation இன் வன் நகலை நேர்காணல் நேரத்தில் நேர்காணல் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும். மேலதிகமாக தமிழ் அல்லது சிங்கள மொழியில் PowerPoint presentation செய்ய விரும்பும் விண்ணப்பதாரிகள் ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்ட வன் நகலை நேர்காணலின் போது சமர்ப்பிக்க வேண்டும்” என இப்பந்தி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஜே.ஜே. இரத்தினசிறி
செயலாளர்
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு